செ.வெ.எண்: 579 நாள்: 09.10.2021

**புதுக்கோட்டை மாவட்டத்தில்**

**10.10.2021 அன்று 735 இடங்களில் நடைபெறும் கோவிட் -19 மாபெரும் தடுப்பூசி முகாம்களில் பொதுமக்கள் தவறாது தடுப்பூசி செலுத்திக்கொள்ள வேண்டும்.**

**13 ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் நகராட்சிகளில் தடுப்பூசி செலுத்திக்கொள்பவர்களில் குலுக்கல் முறையில் பரிசுகள் வழங்கப்படவுள்ளது.**

**மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.கவிதா ராமு, இ.ஆ.ப., அவர்கள் தகவல்.**

---

புதுக்கோட்டை மாவட்டம் முழுவதும் கோவிட் -19 மாபெரும் தடுப்பூசி முகாம்கள் 735 இடங்களில் 10.10.2021 அன்று நடைபெறுகிறது.

இம்முகாமிற்காக 1.11 லட்சம் டோஸ் கோவிட் -19 தடுப்பூசிகள் தயார்நிலையில் உள்ளது.

இம்முகாம்களில் பொதுமக்கள் வசதிக்காக முதல் தவணை, இரண்டாம் தவணை தடுப்பூசி செலுத்திக்கொள்ளும் வகையில் தகுந்த முன்னேற்பாடுகள் சம்மந்தப்பட்ட அலுவலர்களால் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இம்முகாம்கள் காலை 7 மணி முதல் மாலை 7 மணி வரை நடைபெறவுள்ளது.

பொதுமக்கள் கோவிட்-19 தொற்றிலிருந்து தங்களை தற்காத்துக்கொள்வதற்கு தடுப்பூசி மட்டுமே ஒரே வழி என்பதை உணர்ந்து தடுப்பூசியினை ஆர்வமுடன் முகாமிற்கு வந்து செலுத்திக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்

புதுக்கோட்டை மாவட்டத்தில் 13 ஊராட்சி ஒன்றியங்கள் அளவிலும் மற்றும் புதுக்கோட்டை நகராட்சி, அறந்தாங்கி நகராட்சி ஆகிய 2 நகராட்சிகள் அளவிலும், ஆகமொத்தம் மாவட்டத்தில் 15 பகுதிகளுக்கு பரிசுகள் குலுக்கல் முறையில் தேர்வு செய்யப்பட்டு வழங்கப்படவுள்ளது.

மேலும் 13 ஊராட்சி ஒன்றியங்களில் ஒவ்வொரு ஒன்றிய அளவிலும் மற்றும் புதுக்கோட்டை நகராட்சி, அறந்தாங்கி நகராட்சி அளவிலும் 10.10.2021 முகாம்களில் தடுப்பூசி செலுத்திக்கொண்டவர்களின் பெயர், விபரம் சேகரிக்கப்பட்டு குலுக்கல் முறையில் தேர்வு செய்யப்பட்டு, அவர்களுக்கு முதல் பரிசு ஒரு கிராம் தங்கம், இரண்டாம் பரிசு மிக்ஸி, மூன்றாம் பரிசு குக்கர், நான்காம் பரிசு வெஜிடேபிள் கட்டர், ஐந்தாவது பரிசு நான்கு நபர்களுக்கு சேலை ஆகிய பரிசுப் பொருட்கள் வழங்கப்படவுள்ளது.

எனவே புதுக்கோட்டை மாவட்டத்தில் கோவிட்-19 மாபெரும் தடுப்பூசி முகாமில் பொதுமக்கள் தவறாது கலந்துகொண்டு தடுப்பூசி செலுத்திக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள் என மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.கவிதா ராமு, இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

---

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், புதுக்கோட்டை**